வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க. எண். 5378 /ஆ4/2023 நாள் : 17.10.2023

பொருள்: பள்ளிக்கல்வி –திட்ட ஆண்டு 2023–2024 மத்திய அரசின் உதவித்தொகைத் திட்டம் –தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்பு உதவித்தொகைத் தேர்வில் (National Means –Cum –Merit Scholarship) தேர்ச்சி பெற்று NMMSS கல்வி உதவித்தொகை பெறத் தகுதியான மாணவ /மாணவியரின் விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் National Scholarship Portal இணையதளத்தில் புதிதாக பதிவேற்றம் மற்றும் Renewal செய்யும் பணிகளை 16 அக்டோபர் 2023–க்குள் முடிக்க தெரிவிக்கப்பட்டமை –25.10.2023க்குள் முடிக்க கால அவகாசம் வழங்குதல் – சார்பு

பார்வை: 1.மத்திய கல்வி அமைச்சகத்தின் 25.09.2023 ஆம் நாளிட்ட கடிதம்
2.இவ்வலுவலகம் இதே எண்ணிட்ட கடித நாள் : 03.10.2023

========

பார்வை 1–ல் காணும் மத்திய கல்வி அமைச்சகத்தில் கடிதத்தில் தெரிவித்துள்ள படி கடந்த 2022 –23 ஆம் கல்வியாண்டில் NMMS தேர்வில் தேர்ச்சி பெற்று, இக்கல்வியாண்டில் 9 ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியரின் விவரங்கள் National Scholarship Portal இல் கல்வி NMMS உதவித்தொகை பெறுவதற்காக ஆன்லைன் மூலம் பதிவேற்றம் செய்யப்படவேண்டும் என்று அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. இப்பணியை 16 அக்டோபர் 2023 க்குள் முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

எனினும் இதுநாள் வரை ஒரு சில பள்ளிகளே National Scholarship Portal இல் கல்வி NMMS உதவித்தொகை பெறுவதற்காக ஆன்லைன் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது .எனவே அனைத்து அரசு/அரசு நிதியுதவி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் இப்பணியினை 25.10.2023 க்குள் முடித்திட தெரிவிக்கப்படுகிறது.

இப்பணி குறித்து இனிவரும் காலங்களில் ஏதேனும் புகார் பெறப்பட்டால், அப்பள்ளித்தலைமையாசிரியர்களே முழுப்பொறுப்பேற்க நேரிடும் என்பதை திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

// இது மிக மிக அவரசப் பணி // தனிக்கவனம்//

இணைப்பு :Renewal Pending School List

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
- அனைத்து அரசு/அரசு நிதியுதவி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை) அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.